# தமிழர் சமயம்


விலை ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/-

மலர் 3 டிசம்பர் 2011 இதழ் 1

Volume 3 December 2011 Issue 1






## மாடும் மனிதனும் ஒன்றா? “ஆன்மவியல்” சொல்லும் பதில் என்ன?




## உயிரும் ஆன்மாவும் ஒன்றா? வேறு வேறா?

## வகுப்புகள்

இணையத்தளம் : http://www.cict.in
மின்னஞ்சல் : ramasamy.k@cict.in

செம்மொழித் தமிழாய்வு ப

(இந்திய அரசு, மனித வள மேம்பாட்டு அமைச்சகம்,
# 6, பாலாறு இல்லம், காமராசர் சாலை, சேப்

கோ.எண். 11-264/செ.த.ம.நி./2011-12/

பேராசிரியர் க. இராமசாமி
பொறுப்பு அலுவலர்

உலக ஒற்றுமையைக் கருத்திற்
மு. தெய்வநாயகம் அவர்கள் இயற்றியுள்ள ‘தட
என்னும் நூலின்கண் பொதிந்துள்ள கருத்துக்கள்
பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே
சமயக் கருத்துக்கள் உலகச் சமயச் சிந்த
சுட்டிக்காட்டுகிறது இந்நூல். அறிவியலையும்
உள்ளடக்கிய ஆன்மவியல் பற்றிய விளக்கம்
எடுத்துக்கூறப்பட்டுள்ளது. நூலின் தலைப்பில் இ

# கடவுள் வேறு; மதம் வேறு.

**கடவுளால் காட்டப்படுவது பாதை; மதங்களால் ஊட்டப்படுவது போதை.**

கடவுளை அறிவோம்;
மதங்களின் பிடியி–ருந்து விடுதலை அடைவோம்.

**நல் மனம் பெறுதலே தேவையானது, மதம் மாறுதல் தேவையற்றது;**

# மதம் மாற்றுதல் தவறானது.

## கடவுளை அனுபவிப்பவர் இம்மையிலும், மறுமையிலும் மகிழ்ந்திருப்பர்.

## கடவுளை அறிவியல் வழியில் விளக்குவது தமிழர் ஆன்மவியல்.

---

கடவுளை அறிவியல் வழியில் அறிய விரும்புவோர் தொடர்பு கொள்க:


## ஆன்மவியல் ஞான சபை,

**(அனைத்துத் தன்மானத் தமிழர் கூட்டமைப்பின் ஆன்மீகப் பிரிவு)**

278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை–600 023.

☎ 044–26743842; 9840003842; 9444817394 E-mail: tamilarsamayam2010@gmail.com

# மாடும் மனிதனும் ஒன்றா? "ஆன்மவியல்" சொல்லும் பதில் என்ன?

## மாடும் மனிதனும்

**மனிதனுக்கும் மாட்டுக்கும் வேறுபாடு என்ன?** மனிதனுக்கு உடல் இருக்கிறது. மாட்டுக்கும் உடல் இருக்கிறது. மனிதனுக்கு உயிர் இருக்கிறது. மாட்டுக்கும் உயிர் இருக்கிறது. மனிதனுக்கு மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து அறிவுக்குரிய உறுப்புகள் இருக்கின்றன. மாட்டுக்கும் மெய், வாய், மூக்கு, கண், செவி ஆகிய ஐந்து அறிவுக்குரிய உறுப்புகள்



இருக்கின்றன. இதனால் மனிதனும் மாடும் ஒன்றுதான் என்று சொல்லலாமா? கூடாது. ஏன்?

## ஆறாவது அறிவு

மாட்டுக்கு இல்லாத **ஆறாவது அறிவு** மனிதனுக்கு இருக்கிறது. இந்த ஆறாவது அறிவுதான் மாட்டையும் மற்ற உயிரினங்களையும் ஆளுவதற்கு மனிதனுக்குப் பயன்படுகிறது. இந்த ஆறாவது அறிவுக்குரிய உறுப்பு எது? அதைத் தொட்டுக் காட்ட முடியுமா? என்று கேட்டால், இதற்குத் தெளிவான பதில் கூறக் கூடியவர்கள் மிகமிகச் சிலரேயாவர்.

ஆறாவது அறிவுக்கு உரிய உறுப்பு உட–ல் இல்லை. உயிர் எவ்வாறு உட–ல் உறுப்பாக இல்லையோ அவ்வாறே ஆறாவது அறிவுக்குரிய உறுப்பும் உட–ல் உறுப்பாக இல்லை.

உயிர் இருக்கும் உடலையும், உயிர் இல்லாத உடலையும் எவ்வாறு நம்மால் பிரித்து அறிய முடிகிறதோ அவ்வாறே ஆறாவது அறிவு இருக்கும் மனிதரையும் அது இல்லாத மாட்டையும் நம்மால் பிரித்து அறிய முடிகிறது.

## ஆன்மவியல்

**ஆறாவது அறிவுக்குக் காரணமானது ஆன்மா** ஆகும்.

மனினுக்கு உடல், உயிர், ஆன்மா என்னும் மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஆடு, மாடு, போன்ற விலங்குகளுக்கு உடல், உயிர் ஆகிய இரண்டு பகுதிகள் மட்டுமே இருக்கின்றன.

ஆகவே, மனிதனுக்கும் மாட்டுக்கும் உள்ள வித்தியாசமாக ஆறாவது அறிவுக்குக் காரணமான ஆன்மா விளங்குகிறது. மனிதனுக்கும் மாட்டுக்கும் உள்ள வேறுபாட்டுக்குக் காரணமான **ஆன்மாவைப் பற்றிய கல்வியே ஆன்மவியல்** என்று குறிக்கப்படுகிறது.

**ஆன்மவியலை உருவாக்கிய தமிழ் இனம் அழியாமல் பாதுகாக்கப்பட 10ஆம் பிரார்த்தனை – போராட்டம்.**
**இடம் : பனகல் மாளிகை, சைதாப்பேட்டை,**
**நாள்: 16–12–2011,**
**நேரம் : பகல் 11 முதல் 1 வரை**

உடலைப் பற்றிய கல்வி – அறிவியல் என்றும், உயிரைப் பற்றிய கல்வி – மெய்யியல் என்றும், ஆன்மாவைப் பற்றிய கல்வி – ஆன்மவியல் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த **ஆன்மவியல் கல்வி** முழுமையாக, சிறப்பாக உலக மொழிகளில் **தமிழ் மொழியில் மட்டுமே இருக்கின்றது.**

## கடவுளின் மகன்

இந்த ஆன்மா, இப்பேரண்டத்தை



ஆளும் கடவுளின் ஒரு பகுதியாகும். இதனால், கடவுளின் ஆட்சியில் மனிதனுக்கும் பங்கு கிடைக்கிறது. இதனால் மற்ற உயிரினங்கள் அனைத்தையும் மனிதன் ஆளுகின்றான். இதன் காரணமாக மனிதனின் ஆன்மா **சிற்றான்மா** என்றும் கடவுளின் ஆன்மா **பேரான்மா** என்றும் அழைக்கப்படுகின்றன. கடவுளின் பகுதியாக மனிதன் இருப்பதால் கடவுளின் மகனாக, கடவுளிடத்தில் உரிமையுடையவனாக, அவருடைய மகிழ்ச்சியில் பங்குள்ளவனாக மனிதன் இருக்கின்றான். இருப்பினும் கடவுளை அறிய முடியாமல் மனிதனை **ஆணவம்** தடுக்கிறது. மனிதன் துன்பத்துக்குள்ளாகின்றான்.

இதனால் உலக சமயங்களின் அடிப்படைக் கூறுகளாக **1. உடல் 2. உயிர் 3. ஆன்மா 4. கடவுள் 5. ஆணவம்** ஆகிய ஐந்து பகுதிகள் விளங்குகின்றன.

## ஆறாவது அறிவுக்குரிய அறிவியல்

இந்த ஐந்து பகுதிகளும் ஆன்மாவைப் பற்றிய கல்வியாகிய ஆன்மவிய–ல் விளக்கப்படுகின்றன. இந்த விளக்கங்கள் மதங்களில் விளக்கப்படுவது போன்று நம்பிக்கையின் அடிப்படையில் இல்லாமல் **ஆறாவது அறிவுக்குரிய அறிவியல் அடிப்படையில் விளக்கப்படுகின்றன.**

இதனால், **கடவுளையும் ஆறாவது அறிவுக்குரிய அறிவியல் அடிப்படையில் விளக்கக் கூடியதாக ஆன்மவியல் இருக்கிறது.**

## தமிழ் மொழியில் மட்டுமே

உலக மொழிகளில், மற்ற மொழிகளில் இல்லாத ஆன்மவியல் தமிழ் மொழியில் மட்டுமே தமிழ் இலக்கணத்தின் வழியாக விளக்கப்படுகிறது.

ஆறாவது அறிவையுடைய மனிதனை **'உயர்திணை'** என்றும், ஆறாவது அறிவு இல்லாத மற்ற உயிரினங்களையும், உயிரற்ற பொருட்களையும் **'அஃறிணை'** என்றும், தமிழ் மொழி திணை இலக்கணமாகப் பிரித்து விளக்குகிறது. ஆறாவது அறிவைப் பற்றிய தெளிவுள்ள இந்தத் திணை இலக்கணம் உலக மொழிகளில் தமிழில் மட்டுமே இருக்கிறது.

*அவ்வாறே, கடவுளை அனுபவிக்கும் அனுபவத்தை **'அகப்பொருள்'** என்றும் இது மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்– விளக்க முடியாமல் அவரவர் அனுபவித்து மகிழ்வது என்றும், மற்றவர்களுக்கு விளக்கிக் கூறி அறிய வைக்கக் கூடியது **'புறப் பொருள்'** என்றும், உலக மொழிகளில் தமிழ் மொழி மட்டுமே "பொருள் இலக்கணம்" என்னும் பெயரில் விளக்குகிறது.*

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்று கூறுவதன் வழி, அன்பாகிய கடவுளைப் பற்றிய ஆறாவது அறிவுக்குரிய அறிவியலாகிய ஞானக் கருத்துகளைப் போதிக்கும் **"சிவஞானபோதம்"** என்னும் ஒப்பற்ற நூல் ஆன்மவியல் இலக்கண நூலாக, சூத்திரத்தில் தமிழ் மொழியில் மட்டுமே அமைந்துள்ளது.

## ஆணவமாகிய அடிமைத்தளை

இவ்வளவு சிறப்புள்ள தமிழ் இனம் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக அந்நியர்களிடம் அடிமைப்பட்டுத் தன் சிறப்புகளை இழந்து, **அழிந்து கொண்டிருக்கிறது.**

இலங்கையில் தமிழ் இனம் அழிக்கப்பட்டபொழுது தாய்த் தமிழக மக்கள் எவ்வளவோ முயன்றும் அழிவைத் தடுத்து நிறுத்த இயல வில்லை. காரணம் தமிழ் இனத்தைக் கட்டியுள்ள **அடிமைத்தளை.**

## அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனம்

இதனால், அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் சமயம், தமிழர் ஆன்மவியல் அழியாமல் பாதுகாக்கப் பட, தமிழர்களைக் கட்டியுள்ள **அடிமைத்தளை அகற்றப்பட வேண்டும்.**

**இந்தியா விடுதலையடைந்த பின்னர் மொழிவழி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு மற்ற மாநிலங்கள் அனைத்தும் அந்தந்த மொழி பேசும் மக்களால் ஆளப்படும் நிலையில் தமிழ் நாட்டைத் தமிழரல்லாத அந்நியர் ஆண்டு வருவது தமிழர்களின் அடிமைத்தளை நீங்காமையை வெளிப்படுத்துகிறது.**

## பிரார்த்தனைப் போராட்டம்

தமிழ் நாட்டைத் தமிழரே ஆளவும், தமிழர் ஆன்மவியல் உலகம் முழுவதும் பரவவும் ஆன்மவியல் ஞான சபை ஒவ்வொரு ஞாயிறு மாலை 5 மணி முதல் 7 மணி வரை **எல்லாம் வல்ல இறைவனிடம் மன்றாட்டுப் பிரார்த்தனையை** நடத்தி வருகிறது.

இது தவிர ஒவ்வொரு மாதமும் 16ஆம் தேதி பகல் 11 முதல் 1 மணி வரை சைதாப்பேட்டை பனகல் மாளிகைக்கு அருகில் **தமிழ் நாட்டைத் தமிழரே ஆள தமிழர் சமய – பிரார்த்தனை – போராட்டம்** காவல்துறை அனுமதியுடன் நடத்தப்பட்டு வருகிறது.

அனைத்துத் தன்மானத் தமிழர் கூட்டமைப்பின் ஆன்மீகப் பிரிவாகிய **ஆன்மவியல் ஞான சபை, அனைத்துச் சமயத்தவரையும் இணைத்து** இப்பிரார்த்தனையை நடத்துகிறது. 16–12–2011 வெள்ளிக் கிழமை அன்று நடக்க இருக்கும் 10ஆவது நிகழ்வுப் பிரார்த்தனைப் போராட்டத்தில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ஆன்மவியல் ஞான சபை
அனைத்துத் தன்மானத்
தமிழர்களின் கூட்டமைப்பு

# "தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டும்"

## 10ஆம் பிரார்த்தனை - போராட்டம்

நாள்
16.12.2011
வெள்ளிக்கிழமை
காலை 11.30 முதல்
1.30 மணி வரை



இடம்
பனகல் மாளிகை அருகில்
சைதாப்பேட்டை
சென்னை

# அன்புடன் அழைக்கின்றோம்...

---

## தமிழக முதல்வராக எம்.ஜி. ஆர். இருந்த பொழுது அறநிலையத்துறை அமைச்சராக இருந்த திரு. வி.வி. சுவாமிநாதன் அவர்கள் நமது ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

(சிதம்பரம் நடராஜ பெருமான் கோவில் கருவறையின் அருகிலுள்ள மேடையில் தமிழர்கள் தேவாரம் பாட, தீட்சிதர்களால் செய்யப்பட்டிருந்த தடையை உடைத்து, சைவப் பெரியவர் ஆறுமுகச்சாமி அவர்கள் தேவாரம் பாடவும், சிதம்பரம் நடராசப் பெருமான் திருக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் வருவதற்கும் அமைச்சர் பதவியில் இல்லாத போதும் துணை நின்றவர்)

**வி.வி. சுவாமிநாதன்**
முன்னாள் அமைச்சர் & எம்.பி.
அறநிலையத்துறை
எம்.ஜி.ஆர் அரசு

36, சாத்தப்பாடி தெரு,
சிதம்பரம் – 608 001
போன்: 222860
செல்: 9840114855
**நாள்: 23–11–2011**

தவத்திரு டாக்டர் மு. தெய்வநாயகம் அவர்களுக்கு

வணக்கம்.

நான் நேரில் 16–11–2011 வந்து தாங்கள் நடத்தும் "தமிழ் நாட்டைத் தமிழரே ஆள வேண்டு"மெனும் சைதாப் பேட்டை வழிபாட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலவில்லை. இருந்தாலும் தங்கள் புதிய, புரட்சிகரமான கருத்து வெற்றி பெற என் இதயம் நிறைந்த வாழ்த்துகள்.

கிறித்துவ மதப் பாதிரியார்கள் ஜி.யு. போப், வீரமாமுனிவர் போன்றோருக்குப் பிறகு செந்தமிழ் அந்தஸ்தை மத்திய அரசு தந்ததைவிட நீங்கள் "ஆன்மா வேறு; உயிர் வேறு" என்ற அரிய கருத்து மூலம் தமிழ் அன்னைக்கு புகழைப் பெய்திருக்கிறீர்கள். மதம் வேறு; கடவுள் வேறு என்பதைத் தெளிந்து கடவுளைப் பார்த்து "தாங்கள் எந்த மதம்" என்று கேட்கிற அற்புதத் துணிச்சல் சிந்தனைச் சிற்பி சாக்ரடிஸ் கூட தராதது. தங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும். தங்கள் முயற்சி வெற்றி பெறுக. மதம் பரம்பொருளைப் பார்க்கும் பாதையை விட்டு போதை தரும் பொருளாகிவிட்டது.

அன்புள்ள,
**வி.வி. சுவாமிநாதன்**

# கிறிஸ்துவிற்கு எதிரானது கிறிஸ்தவ மதம். எவ்வாறு?

– ஆசிரியர்

கிறிஸ்தவ மதம் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறுகிறது. கிறிஸ்தவ மதம் இல்லாவிட்டால் இயேசு கிறிஸ்துவின் வரலாறு நமக்குத் தெரியாது. ஆகவே, கிறிஸ்துவின் வரலாற்றை நாம் புரிந்து கொள்ளுவதற்குக் கிறிஸ்தவ மதம் நமக்குப் பயன்படுகின்றது.

கிறிஸ்து கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தார். கிறிஸ்தவ மதம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் என்னும் ரோம அரசனால் உருவாக்கப்பட்டது.

அதாவது, இன்று கிறிஸ்தவ மதத்திற்கு அடிப்படையாக விளங்கும் புதிய ஏற்பாட்டிலுள்ள 27 நூல்களைத் தொகுத்து, 27 நூல்கள் மட்டுமே என்னும் வரையறை செய்து அவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ மதத்தை உருவாக்கி, கிறிஸ்தவ மதத்திற்கான சட்டதிட்டங்களை முத–ல் வரையறை செய்தவர் கான்ஸ்டன்டைன் அரசன்.

இவருடைய நோக்கம், கிறிஸ்து எவற்றைக் கூறியுள்ளாரோ அவற்றைச் செய்வது அன்று. இவருடைய ஆட்சியின் சிறப்புக்குக் கிறிஸ்தவ மதத்தைப் பயன்படுத்திக் கொள்ளுவது ஆகும்.

இவர் கிறிஸ்துவின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, கிறிஸ்துவின் கருத்துகளைச் செயல்படுத்த வேண்டும் என்னும் நோக்கில் செயல்பட்டவர் அல்லர்.

இவருடைய அரசியல் எதிரிகளால் இவருக்குச் சிக்கல் ஏற்பட்டபொழுது, நடைபெற்ற போரில் வெற்றியடைவதற்காக இவருக்குக் காட்சியில் கிடைத்ததாகக் கூறப்படும் சிலுவை அடையாளத்தைப் பயன்படுத்தி, வெற்றி பெற்றமையால் அதுவரை கிறிஸ்தவர்களை ரோம ஆட்சியாளர்கள் வேட்டையாடி வந்ததை நிறுத்தி, ரோம ஆட்சியாளருக்கு ஆதரவாகக் கிறிஸ்தவ மதத்தை உருவாக்கினார்.

அதுவரை கிறிஸ்தவர்கள், இயேசு கிறிஸ்து காட்டிய விண்ணரசுக் கொள்கையை இம்மண்ணில் செயல்படுத்தும் வீரர்களாகச் செயல்பட்டு வந்தார்கள்.

கான்ஸ்டன்டைன், விண்ணரசை இம்மண்ணில் செயல்படுத்தும் செயல்வீரர்களாகச் செயல்பட்டு வந்த கிறிஸ்தவர்களை அவர்கள் அதுவரை எந்த நோக்கத்திற்காகச் செயல்பட்டு வந்தார்களோ அந்த நோக்கத்தை மறந்து விண்ணரசுக்கு எதிரான மண்ணரசுக்காகச் செயல்படும் நிலையை உருவாக்கினார்.

அதற்கு ஏற்றபடி கிறிஸ்தவ மதத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்.

அது முதல் கிறிஸ்தவ மதம் இயேசு கிறிஸ்து காட்டிய விண்ணரசுக் கொள்கைக்கு எதிராக, ரோமர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்களின் மண்ணரசுக் கொள்கைக்கு ஆதரவாகச் செயல்பட்டு வருகிறது.

இதனால், இன்று உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ அறிஞர்களிடம், விண்ணரசு, மண்ணரசு, இறையரசு ஆகிய மூன்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? என்னும் கேள்வியைக் கேட்டால் யாராலும் பதில் சொல்ல இயலாது. மூன்றையும் சேர்த்துக் குழப்புவார்கள். அல்லது “மூன்றும் ஒன்று தான்” என்று இயேசு கிறிஸ்துவின் கொள்கைக்கு எதிராகப் பதில் கொடுப்பார்கள்.

கிறிஸ்தவ மத அறிஞர்களின் நிலையே இவ்வாறு இருக்குமானால், சாதாரண கிறிஸ்தவப் பொது மக்களின் நிலையைக் கூறவும் வேண்டுமோ?

ஆகவே, கிறிஸ்து இந்த உலகில் நிலை நாட்ட வந்த விண்ணரசுக் கொள்கையை உலக மக்கள் அறிய முடியாமல் தடுக்கும் மண்ணரசுக் கொள்கையையுடைய கிறிஸ்தவ மதம், கிறிஸ்துவுக்கு எதிரானது என்பதை எந்தக் கிறிஸ்தவ மத அறிஞராலும் மறுக்க இயலாது என்பதே நடைமுறை உண்மையாகும்.

இந்த வரலாற்று உண்மையை மேலும் அறிந்து கொள்ள இயேசு கிறிஸ்து பிறந்த யூத மதத்தின் மண்ணரசுக் கொள்கையையும்

இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த விண்ணரசுக் கொள்கையையும் நோக்குவோம்.

கிறிஸ்தவ மதத்தின் மூவொருமைக் கோட்பாட்டின்படி, இயேசு கிறிஸ்து யூத மதத்தில் பிறந்தவரே தவிர, யூத இனத்தில் பிறந்தவர் அல்லர்.

அதாவது, இயேசு கிறிஸ்து யூத மதத்தைச் சேர்ந்த மரியாளுக்குப் பிறந்தவரே தவிர யூத இனத்தில் பிறந்த யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்த யோசேப்பின் மகன் அல்லர். கடவுளின் பகுதியாகிய பரிசுத்த ஆவியின் வழி பிறந்த கடவுளின் மகன். இது கிறிஸ்தவ மதத்தில் உள்ளடங்கி இருக்கும் கருத்து.

ஆனால், கிறிஸ்தவ மதத்தில் உள் அடங்கி இருக்கும் இந்த உண்மைக்கு மாறாகக் கிறிஸ்தவ மதம், அவர் யூத அரசனாகிய தாவீதின் பரம்பரையில் பிறந்த ஒரு யூத இனத்தினர் என்பதாகக் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பொது மக்களைத் தவறான நம்பிக்கையில் வைத்து, இம்மண்ணரசுக் கொள்கையையுடைய யூத மத நம்பிக்கையாளர்களாக அவர்களை வைத்துள்ளது.

இதனால், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பொது மக்களுக்கு, யூத மதம் கூறும் மண்ணரசுக் கொள்கைக்கும், இயேசு கிறிஸ்து கூறும் விண்ணரசுக் கொள்கைக்கும் உள்ள வேறுபாடு தெரியாதபடி மறைக்கப்பட்டிருக்கிறது.

இதன் வழி இயேசு கிறிஸ்து காட்டிய விண்ணரசைப் பற்றிய எண்ணமே கிறிஸ்தவர்கள் உள்ளங்களில் ஏற்பட்டு விடாதபடி திறமையாக மறைக்கப்பட்டு, கிறிஸ்தவர்கள் விண்ணரசின் குடிமக்களாக இல்லாமல், விண்ணரசுக்கு எதிரான மண்ணரசின் குடிமக்களாக ஆக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவின் கொள்கைக்கு எதிராகச் செயல்படுமாறு நடத்தப்படுகின்றார்கள்.

இதன்வழி, இயேசு கிறிஸ்துவின் விண்ணரசுக் கொள்கைக்கு எதிரான, யூத மதத்தின் மண்ணரசுக் கொள்கையான, பணக்காரன் ஆசீர்வதிக்கப்பட்டவன், பிரபுக்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். அரசன் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்று நம்பும் நிலைக்கும் இதையே மற்றவர்களுக்குக் கூறி மற்றவர்களும் இதை நம்பவைக்கும் நிலைமைக்கும் கிறிஸ்தவ மதம் கிறிஸ்தவ மக்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறது.

இது முழுமையாக, கிறிஸ்துவுக்கும், கிறிஸ்துவின் கொள்கையான விண்ணரசுக் கொள்கைக்கும் எதிரானது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

மேலும், இயேசு கிறிஸ்து பிறந்த ஆசியக் கண்டத்தையும் இயேசு கிறிஸ்து பேசிய ஆசிய மொழியையும் இயேசு கிறிஸ்துவின் சீடர்களான ஆசிய மக்களையும், கிறிஸ்தவத்தை உருவாக்கிய ஆசிய ஆன்மீகத்தையும், பைபிள் முழுவதையும் எழுதியுள்ள ஆசிய ஆன்மீகச் சிந்தனையாளர்களையும் இழிவுபடுத்தி, ஐரோப்பிய மொழிகளான கிரேக்கு, இலத்தீன் சிறப்பிக்கப்பட்டும், ஐரோப்பிய மக்களே சிறந்த ஆன்மீகவாதிகள் எனவும், பைபிளுக்கு விளக்கம் கொடுக்கும் ஆன்மீகச் சிந்தனையாளர்கள் ஐரோப்பியர்களே எனவும், ஆசியப் பண்பாட்டைவிட ஐரோப்பியப் பண்பாடே உயர்ந்தது எனவும் உலக முழுவதுமுள்ள கிறிஸ்தவர்கள் நம்ப வைக்கப்பட்டு, ஐரோப்பியர்களின் மண்ணரசுக் கொள்கைக்குக் கிறிஸ்தவ மதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் பயனாக, ஆசிய ஆன்மீகக் கிறிஸ்தவச் சிந்தனை கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியரின் மண்ணரசுக் கொள்கைக்கு அடிமைப்படுத்தப்பட்டு, ஐரோப்பியரின் மண்ணரசுக் கொள்கை கிறிஸ்தவ மதத்தின் மூலம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டு, உலகம் முழுவதும் ஐரோப்பியர் ஆட்சிக்கு வரவழைக்கப்பட்டதுடன், கிறிஸ்தவ மதத்திற்கும் ஐரோப்பியர் தலைமை தாங்கி இயேசு கிறிஸ்துவின் விண்ணரசுக் கொள்கைக்கு எதிராக ஐரோப்பியர்களின் மண்ணரசுக் கொள்கையைச் செயல்படுத்தி வருகின்றனர்.

இதனால், கிறிஸ்தவ மதமும், உலக அரசியலும் வெள்ளையராகிய ஐரோப்பியர் அரசியலுக்கு உட்படுத்தப்பட்டு, வெள்ளையினமே பிறப்பால் உயர்ந்த இனம் என்றும், வெள்ளையினத்தினரின் தலைமையின் கீழுள்ள கிறிஸ்தவ மதமே உயர்ந்த மதம் என்றும், வெள்ளையர் உலக ஆட்சியைக் கையில் வைத்துள்ளமையால் ஏற்பட்டுள்ள பொருளாதார வளத்தினால் வெள்ளை இனத்தினரே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும், இதனால் பண வசதியில் வெள்ளை இனத்தவரே சிறந்தவர்கள் என்றும், இனம், மதம், பணம் இவற்றில் உலகிலுள்ள மற்ற இனத்தினரைவிட உயர்வுடையவர்களாக உலக மக்களால் நம்ப வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால், கிறிஸ்தவ மதத்தைப் பயன்படுத்தி, கிறிஸ்துவின் கொள்கையாகிய விண்ணரசுக் கொள்கைக்கு எதிராக, ஐரோப்பியர்களால் பயன்படுத்தப்படும் கிறிஸ்தவ மதம் கிறிஸ்துவுக்கு எதிரானது என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை.

இந்த வரலாற்று உண்மையைக் கிறிஸ்தவ மதம் உருவாக்கியுள்ள புதிய ஏற்பாட்டின் வழி பார்ப்போம்.

மண்ணரசு, விண்ணரசு, இறையரசு மூன்றுக்கும் உள்ள வேறுபாடு தெரிய வேண்டுமானால் புதிய ஏற்பாடு கூறும் மூன்று வகை கிறிஸ்துகளான

1. யூத இன அரசனாகிய கிறிஸ்து
2. உலக மீட்பராகிய கிறிஸ்து
3. உலக மீட்பராகிய கிறிஸ்து விற்கு எதிரான அந்திக் கிறிஸ்து

ஆகிய மூவருக்கும் உள்ள வேறுபாடு தெரிய வேண்டும். இவற்றை முறையே பார்ப்போம்.

–தொடரும்




## வகுப்புகள்

"கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து
ஒருவரே மீட்பர்"
என்பதை மறுக்கும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதில்
அறிவியல் அடிப்படையில் கொடுக்கப்படும்.

வகுப்பிற்கு
"வா அல்லது அனுப்பு"
என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

# வகுப்புகள்

***கிறிஸ்துவிற்கு எதிரானது***
***கிறிஸ்தவ மதம். எவ்வாறு?***

என்னும் தலைப்பில்
23-01-2012
திங்கள் காலை 9 மணி முதல்
28-01-2012
பகல் 2 மணி வரை
6 நாள் வகுப்புகள்

தஞ்சாவூருக்கு அருகிலுள்ள
திருப்பூந்துருத்தி
கருணையானந்தர் ஆசிரமத்தில்

வகுப்புகள் கிறிஸ்தவ
ஆராய்ச்சியாளர்களுக்கும், கிறிஸ்தவத்
தலைவர்களுக்கும், கிறிஸ்தவப்
போதகர்களுக்கும்
நடத்தப்படுகின்றன.

இயேசு கிறிஸ்துவின் மீட்பு
தோமா வழி தமிழ்க் கிறிஸ்தவத்தின்
மணி முடியாக விளங்கும்
தமிழர் ஆன்மவியல் வழி அறிவியல்
அடிப்படையில் நிலைநாட்டிக்
காட்டப்படும்

உலக மக்கள் அனைவரும்
கிறிஸ்துவின் மீட்பைத் தெளிவாக
அறிந்து உணர இது வழி நடத்தும்.

6 நாட்களுக்கும்
உணவு உறைவிடம்
முத-யவற்றிற்கான கட்டணம்
**ரூபாய். 1500/-**

யூத உணவு அல்லாத கிறிஸ்தவ உணவு
பரிமாறப்படும்.

**பதிவு செய்யக் கடைசி நாள்**
**15-01-2012**

# நான் புரிந்து கொண்ட கிறிஸ்தவமும் ஆன்மவியலும்

– கிறிஸ்டி, கனடா

**(கனடா நாட்டில் நமது ஆன்மவியல் கருத்துகளை ஆர்வமுடன் விதைத்துக் கொண்டிருக்கும் திரு. கிறிஸ்டி அவர்கள் கூறுவது என்ன? கேட்போமே)**

கனடா நாட்டி–ருந்து இந்தியா வந்த நான் கடந்த ஒரு மாதகாலமாக ஐயா தெய்வநாயகம், சகோதரி தேவகலா ஆகியோருடன் சென்னையில் தங்கி இருந்தேன். இதன் மூலமாக இந்தியாவில் அப்போஸ்தலர் தோமா செய்த நற்செய்திப் பணியின் விளைவையும், தமிழர் ஆன்மவிய–ன் தனிச் சிறப்பையும் அறிந்து கொண்டேன். அப்போஸ்தலர் தோமா அவர்கள் இந்தியாவில் விதைத்த விதை வளர்ந்து, செழித்துள்ளமையை அறிந்து கொண்டேன்.

ஐயா தெய்வநாயகம் அவர்களின் 43 ஆண்டுக் கால ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்தவையே மேற்படியான ஆய்வுக் கருத்துகள். இதன் மூலம் **ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவனாக இருந்த நான் வேதாகமத்தைப் புதியதோர் கண்ணோட்டத்தின் மூலம் வாசிக்கக் கற்றுக்கொண்டேன்.** ஐயாவின் ஆய்வு பல புதிய கருத்துக்களை அறியக் கூடியதாக இருந்தது.

தமிழ் மொழியின் சிறப்பையும் அறிந்து கொண்டேன். ஆனாலும் கவலையான விஷயம் என்னவென்றால் ஐரோப்பிய வழிக் கிறிஸ்தவர்களும், தோமா வழிக் கிறிஸ்தவராகிய சைவரும், வைணவரும் முறையே ஐரோப்பியர் களுக்கும், பிராமணர்களுக்கும் அடிமையாக இருக்கின்றனரே என்பதையும் அத்துடன் இவ்வளவு சிறப்பு பெற்ற தமிழும், தமிழர்களும் அரசிய–லும், ஆன்மீகத்திலும் அடிமைத்தனத்திற்குள்ளாகி தங்களது சிறப்பை மறந்து இவை அனைத்திற்கும் காரணமான பொது எதிரியாகிய ஆரிய பிராமணரையும் அவர்களது கொள்கையாகிய பிராமணீயத்தையும் இனம் கண்டு கொள்ள முடியாதவர்களாக இன்றும் இருப்பதே மிகுந்த வேதனையளிக்கின்றது. ஆனாலும் ஒரு நம்பிக்கை ஐயா தெய்வநாயகம், அவர்களுக்கு இறைவன் (ஈசன்) அளித்த வாக்கின் படியே வெகு சீக்கிரத்தில் தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் விடுதலை தரப் போகின்றார் தென்னாட்டின் சிவனாகப் போற்றப்படும் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய கடவுள்.

## ஆன்மவியல்



1. நான் பிறந்ததில் இ… வனாக இருந்தும் … சரீரம் என்பனவற்… அடிப்படையில் வி… கொள்ளாதவனாக… மற்றவர்களுக்கு … வனாகவும் இருந்… இங்கு வந்து கற்… பின்பு இவை மூன்… வேறு பாட்டை அறி… விளங்கிக் கொண்…
2. கடவுள் இல்லை … நாத்திகனுக்கும் அ… கடவுள் இருக்கின்… நிரூபிக்கக் கூடியதாக உள்ளது.
3. நான் யார்? நான் பிறக்கும்முன் எங்கு இருந்தேன்? நான் இறந்த பின் எப்படி இருப்பபேன்? இறந்த பின் நான் இருப்பேன் என்றால் இப்பொழுது எப்படி வாழ வேண்டும் என்பதையும் அறிவியல் முறையில் அறிந்து கொண்டேன்.
4. தோமா வழிக் கிறிஸ்தவத்தையும், …க் கிறிஸ்தவத்தையும் …யில் இணைத்து, …ம், திருமுறையையும் …து கொள்ள

**…ல் தமிழருக்குக் … அரியதோர் சொத்து. …ம்தமிழும், தமிழரும் …ப்படுவர்.**

**… மதங்களையும் …தம் புதியதோர் பாலம் …ஆன்மவியல். இதன்மூலம் …த்தாழ்வுக்கு …த புதியதோர் சமூகம் அமையும்.**

7. தனியுடைமைக் கோட்பாட்டில் இருக்கும் மானிடரை, சமத்துவ – பொதுவுடைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் வாழ வழி வகுப்பதாய் இறைவனின் திட்டமாகிய மனமாற்றத்திற்கு நிச்சயமாக வழி வகுப்பதாய்த் தமிழர் ஆன்மவியல் விளங்குகின்றது.

கேள்வி - பதில்

# உயிரும் ஆன்மாவும் ஒன்றா? வேறு வேறா?

முனைவர் தெ. தேவகலா M.A., M.Phil., Ph.D.

( நமது ஆசிரியர் பேராசிரியர் முனைவர் மு. தெய்வநாயகம் எழுதிய **'உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும்'** எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு கேள்விகளும் பதில்களும் அமைக்கப்பட்டுள்ளன. )

1. எல்லா உயிரினங்களுக்கும் உடல் உண்டு. சரியா? தவறா?
   சரி.
2. உடல் எவற்றால் ஆனது?
   நிலம் – நீர் – நெருப்பு – காற்று – ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களால் ஆனது.
3. எல்லா உயிரினங்களுக்கும் உயிர் உண்டு. சரியா? தவறா?
   சரி.
4. உயிர் என்பது என்ன?
   உடலை அழியாமல் பாதுகாப்பது உயிர் ஆகும்.
5. எல்லா உயிரினங்களுக்கும் ஆன்மா உண்டு. சரியா? தவறா?
   தவறு.
6. தவறு என்றால் உயிரினங்களில் ஆன்மாவையுடைய உயிரினம் எது?
   மனிதன் மட்டுமே.
7. அப்படியானால் மற்ற உயிரினங்களி–ருந்து மனிதன் வேறுபட்டவனா?
   ஆம். வேறுபட்டவனே.
8. மற்ற உயிரினங்களி–ருந்து மனிதன் எவ்வாறு வேறுபட்டவனாயிருக்கிறான்?
   மற்ற உயிரினங்கள் அனைத்திற்கும் உடல், உயிர் மட்டுமே உண்டு.
   ஆனால், மனிதனுக்கு இவற்றோடு ஆன்மாவும் உண்டு.
   மற்ற உயிரினங்களுக்கு இல்லாத ஆறாவது அறிவையுடையவன் மனிதன்.
9. உயிரினங்கள் எத்தனை வகைப்படும்?
   உயிரினங்கள் ஆறு வகைப்படும்; உயிரினங்களுக்குரிய ஆறு வகையான அறிவுகளின் அடிப்படையில் உயிரினங்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன.
10. ஆறு அறிவுகள் எவை?

| | | |
|---|---|---|
| 1) தொட்டு அறிதல் | – அதற்குப் பயன்படும் உறுப்பு | – உடல். |
| 2) சுவைத்து அறிதல் | – அதற்குப் பயன்படும் உறுப்பு | – வாய். |
| 3) நுகர்ந்து அறிதல் | – அதற்குப் பயன்படும் உறுப்பு | – மூக்கு. |
| 4) கண்டு அறிதல் | – அதற்குப் பயன்படும் உறுப்பு | – கண். |
| 5) கேட்டு அறிதல் | – அதற்குப் பயன்படும் உறுப்பு | – காது. |
| 6) சிந்தித்து அறிதல் | – அதற்குப் பயன்படும் கருவி | – உள்ளம். |

நான் யார்?
உடல்
உயிர்
ஆன்மா
கடவுள்
ஆணவம்

11. உயிரினங்கள் அனைத்தும் இந்த ஆறு அறிவுகளின் அடிப்படையில்தான் பகுக்கப்பட்டுள்ளனவா? எவ்வாறு?

உயிரினங்கள் இந்த ஆறு அறிவுகளின் அடிப்படையில் ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர் என ஆறறிவு வரை பகுக்கப்பட்டுள்ளன.

12. ஆறறிவு வரையிலான இப் பகுப்பிற்கு எடுத்துக்காட்டு தர முடியுமா?

1. ஓரறிவுயிர் – தொடு உணர்வை அறிதல், உடலை மட்டும் கொண்டது. (மரம், செடி, கொடி முத–யன)

2. ஈரறிவுயிர் – தொடு உணர்வுடன் சுவையுணர்வை அறியும் வாயையும் கொண்டது. (மண்புழு போன்றவை)

3. மூவறிவுயிர் – தொடுவுணர்வு, சுவையுணர்வுடன் நுகர்வுணர்வை அறியும் மூக்கையும் கொண்டது. (எறும்பு, சிதல் போன்றவை)

4. நாலறிவுயிர் – மூவறிவுடன், காட்சியை அறியும் கண்களையும் கொண்டது. (நண்டு, தும்பி முத–யன)

5. ஐந்தறிவுயிர் – நாலறிவுடன் கேள்வியை அறியும் செவிகளையும் கொண்டது. (விலங்குகள், பறவைகள் முத–யன)

6. ஆறறிவுயிர் – ஐந்து அறிவுடன், ஆறாவதாகிய பகுத்தறிவையும் கொண்டது. (மனிதர்கள்)

13. உயிரினங்களில் வேறுபட்டு விளங்கும் மனிதனையும் மற்ற உயிரினங்களையும் இவ்வாறு வேறுபடுத்திக் காட்டியது யார்?

தமிழர்கள்.

14. தமிழர்கள்தாம் இவ்வாறு பகுத்துக் கூறியுள்ளனர் என்பதற்கு என்ன சான்று?

தமிழரின் பழமையான இலக்கணங்களே சான்று.

15. அந்த இலக்கண நூல்களின் பெயர்கள் சிலவற்றைக் கூற முடியுமா?

பழமையான தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் மற்றும் பிற இலக்கண நூல்களான நன்னூல், புறப் பொருள் வெண்பாமாலை போன்றவையாகும்.

16. உயிரினங்களை இவ்வளவு நுணுக்கமாகப் பகுத்திருப்பதைப் பிற உலக மொழிகளில் காண முடியுமா?

தமிழைத் தவிர வேறு எந்த மொழிகளிலும் காண இயலவில்லை. இது தமிழ் மொழியின் தனிச் சிறப்பு. உயிரினங்களை ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர் என ஆறு அறிவுகளின் அடிப்படையில் தனித்தனியாகப் பகுத்ததோடு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமாகவும் பகுத்துள்ளனர்.

17. ஒட்டு மொத்தமாக எவ்வாறு பகுத்துள்ளனர்?

உயிரினங்களில், ஆறறிவுக்குக் காரணமான ஆன்மாவையுடைய மனிதனை உயர்திணை என்றும் ஆன்மா இல்லாத மற்ற அனைத்து உயிரினங்களையும் அஃறிணை என்றும் திணை இலக்கணம் வழியாகப் பகுத்துக் காட்டியுள்ளனர்.

18. ஆன்மா என்பது என்ன?

ஆறாவது அறிவிற்கு அடிப்படையாக இருப்பது ஆன்மா.

19. ஆன்மா – உள்ளம் (Soul) இரண்டும் ஒன்றா? வேறு வேறா?

இரண்டும் ஒன்றே.

20. ஆன்மாவும் மனமும் ஒன்றா? வேறுவேறா?

ஒன்றல்ல; வேறுவேறானவை.

21. மனம் என்பது மனிதருக்கு மட்டும்தாம் உண்டா? விலங்கினங்களுக்கும் உண்டா?

மனம் மனிதருக்கும் உண்டு. விலங்கினங்களுக்கும் உண்டு. எனவேதான், மனம் பாதிக்கப்பட்ட நிலை விலங்கினங்களுக்கும் ஏற்படுவதைப் பார்க்கின்றோம்.

22. விலங்கினங்களுக்கு மனம் பாதிக்ககப்படுவதற்கு எடுத்துக்காட்டு தர முடியுமா?

வெறி நாய், மதம் பிடித்த யானை முத–யவை பிற நாய், யானைகளி–ருந்து வேறுபட்டு வெறித் தனமாய்ச் செயல்படுவதைப் பார்க்கின்றோம். இவ்வாறு அவை செயல்படக் காரணம் அவற்றின் மனப் பாதிப்பே.

23. மனம் உடைய மற்ற உயிரினங்களும் மனிதரும் ஒன்றுதாமே?

இல்லை. மனம் மற்ற உயிரினங்களுக்கும் உண்டு. ஆனால், ஆன்மா மனிதருக்கு மட்டுமே உண்டு. எனவேதான், மனிதர் மட்டுமே ஆறாவது அறிவை உடையவர் என்று பிரிக்கப்பட்டுள்ளனர்.

24. போன பிறவி. இந்தப் பிறவிக் கொள்கைப்படி மனிதர் இன்னொரு பிறவியில் மாடாகப் பிறக்கக் கூடுமா?

ஆறாவது அறிவிற்குக் காரணமான ஆன்மாவையுடைய மனிதர், ஆன்மா இல்லாத, ஐந்தறிவு உயிரினமான மாடாகப் பிறப்பர் என்பது எவ்வாறு பொருந்தும்?

25. அப்படியானால் போன பிறவி, அடுத்த பிறவி கொள்கை உடையவர்களுக்கு ஆன்மாவைத் தெரியாதா?

தெரியாது. ஆனால் அவர்களுக்கு உயிரைப் பற்றி தெரியும்.

26. போன பிறவி, அடுத்த பிறவியாகிய பிறவி சுழற்சிக் கொள்கையை உருவாக்கியவர்கள் காலத்தில் ஆன்மாவைப் பற்றிய ஆய்வு வளரவில்லையா?

இல்லை. உடலையும் உயிரையுமே ஆழமாக அறிந்திருந்தனர்.

27. உடலைப் பற்றிய ஆய்விற்கு என்ன பெயர்?

அறிவியல்.

28. உயிரைப் பற்றிய ஆய்விற்கு என்ன பெயர்?

மெய்யியல்.

29. ஆன்மாவைப் பற்றிய ஆய்விற்கு என்ன பெயர்?

ஆன்மவியல்.

30. பொதுவாக உயிரும் ஆன்மாவும் ஒன்று என்றுதானே நம்பப்படுகிறது. இது சரியா?

தவறு. உயிர் வேறு; ஆன்மா வேறு.

31. உடலை அழியாமல் பாதுகாக்கின்ற உயிருக்கு உருவம் உண்டா?

உயிருக்கு மட்டுமே உருவம் உண்டு; எனவேதான், உயிர் உடலை விட்டு நீங்கும்போது அவ்வுட—ன் உருவம் அழியத் தொடங்குகிறது.

32. உயிரின் உருவம் என்ன?

உயிர் எந்த உட—ல் இருக்கின்றதோ அந்த உட—ன் உருவம்தான் உயிரின் உருவம்.

33. அப்படியானால் உயிரின் உருவம் வெவ்வேறாக உள்ளதா?

ஆம். வெவ்வேறாகவே உள்ளது.

34. உயிர் வெவ்வேறு உருவத்திலுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு தர முடியுமா?

யானையின் உயிர் யானை வடிவில் உள்ளது. பூனையின் உயிர் பூனை வடிவில் உள்ளது.

இவ்வாறே மரம், செடி, கொடிகளின் உயிர் வெவ்வேறு வடிவில் உள்ளது. எனவேதான், ஒரு சிறிய இலையை வைத்து அது எந்த மரம் அல்லது எந்தச் செடியைச் சேர்ந்தது என்று கூற முடிகிறது.

35. அப்படியானால் வெவ்வேறு வடிவில் உடல் இருப்பதற்குக் காரணம் அவற்றில் வெவ்வேறு வடிவில் இருக்கும் உயிரால்தானா?

ஆம். மனித வடிவம், விலங்கு வடிவம், தாவர வடிவம் எனப் பல்வேறு வடிவங்களில் உயிர் உள்ளது. எனவேதான், ஒரு ‘கை’ மட்டும் தனியே கிடைத்தால் இது மனிதனுடைய கையா? விலங்கினுடைய கையா? விலங்கின் கை என்றால் எந்த விலங்கின் கை என்பனவற்றையெல்லாம் அறிய முடிகிறது.

36. அப்படியானால் உயிரினங்களின் உடலை அடையாளம் காண அடிப்படையாயிருப்பது அவற்றிலுள்ள உயிர்தானே?

ஆம், உயிரினங்களின் உடலை அடையாளம் காண அவற்றிலுள்ள உயிரே அடிப்படையாய் உள்ளது.

37. எல்லா உயிரினங்களுக்கும் இயல்பிலேயே இருக்கும் உணர்விற்குப் பெயர் என்ன?

இயல்பூக்க அறிவு (Natural Instinct).

38. இயல்பூக்க அறிவு என்பது என்ன?

இயல்பூக்க அறிவு என்பது உடலை அழியாமல் பாதுகாக்கும் உயிரின் செயல்பாடு.

39. இயல்பூக்க அறிவு (Natural Instinct) என்பதும் பகுத்தறிவு (Power of Discerning) என்பதும் ஒன்றா? வேறு வேறா?

ஒன்றல்ல; அவை வெவ்வேறானவை.

40. அவை இரண்டற்கும் என்ன வேறுபாடு?

உடலை அழியாமல் பாதுகாக்கும் இயல்பூக்க அறிவு உயிரின் செயல்பாடு. இது அனைத்து உயிரினங்களுக்கும் உண்டு. ஆனால் பகுத்தறிவு என்பது மனிதனுக்கேயுரிய ஆறாவது அறிவை அடிப்படையாகக் கொண்டது.

41. விலங்குகளுக்குப் பகுத்தறிவு இல்லை என்று சொல்ல முடியுமா? அவற்றிற்கு முன் நாம் மெழுகினால் ரொட்டி போன்று இருக்கும் ஒன்றை வைத்தால் அதை நுகர்ந்துவிட்டுச் சாப்பிடாமலே சென்று விடுகின்றனவே?

காரணம் பகுத்தறிவல்ல. அவற்றின் இயல்பூக்கம்.

42. இயல்பூக்கத்திற்கு இன்னோர் எடுத்துக்காட்டு தர முடியுமா?

தூங்குகின்ற ஒருவர் கை மீது நெருப்பு பட்டால் உடனே அவர் வெடுக்கென்று கையை இழுப்பதைப் பார்க்கின்றோம். காரணம் இயல்பூக்கம்.

43. இயல்பூக்கத்திற்கும் பகுத்தறிவுக்கும் இடையேயுள்ள வேறு நுட்பமான வேறுபாடு என்ன?

குழந்தை பிறந்தவுடன் துள்ளிக் குதிப்பதில்லை. ஆனால், ஆட்டுக்குட்டி ஒன்றை எடுத்துக் கொள்வோமானால் அது பிறந்தவுடன் துள்ளிக் குதிக்கிறது. அது அன்று எப்படி இருந்ததோ, அப்படியேதான் இன்றும் உள்ளது. ஆனால், பகுத்தறிவின் காரணமாக மனித வாழ்க்கையில் காலந்தோறும் பல்வேறு மாற்றங்களையும் வளர்ச்சிப் படிநிலைகளையும் காண்கின்றோம்.

எனவே, இயல்பூக்க அறிவுக்குக் காரணமான உயிரின் செயல்பாடுகள் வேறு. பகுத்தறிவுக்குக் காரணமான ஆன்மாவின் செயல்பாடுகள் வேறு;

44. உயிரின் செயல்பாடுகள் யாவை?

முக்கியமாக ஆறு செயல்களைக் கூறலாம். அவை

1. உணவைச் செரித்தல்
2. செரிக்கப்பட்ட உணவை இரத்தத்தோடு கலத்தல்
3. இரத்தத்தைச் சுத்தமாக்குதல்
4. சுத்தமாக்கப்பட்ட இரத்தத்தை உடல் முழுவதும் அனுப்புதல்
5. தேவையற்ற பொருள்களைக் கழிவுகளாக வெளியேற்றல்
6. உடலுக்குத் தீங்கு வராமல் அனிச்சைச் செயல்களை நிகழ்த்துதல்

ஆகிய இயல்பூக்கச் செயல்களை உயிர் செய்து கொண்டிருக்கிறது.

45. ஆன்மாவின் நிலைகளும் செயல்பாடுகளும் யாவை?

இதற்கும் முக்கியமாக ஆறு செயல்களைக் கூறலாம். அவை

1. மனித இனத்திற்கு மட்டுமே இருப்பது ஆன்மா;
2. ஆறாவது அறிவு செயல்படுவதற்குக் காரணமாயிருப்பது;
3. ஆன்மீகப் பகுத்தறிவுக்குக் காரணமாயிருப்பது;
4. ஞானத்திற்கு (wisdom) உரியது.
5. அக ஒளியையும் உணர்வது
6. உயிரினங்களை ஆளுவதற்குக் காரணமானது

46. ஆன்மாவிற்கே உரிய தனிச் சிறப்பு என்ன?

ஆளுகை (அ) ஆட்சி செய்வது ஆகும். எனவே, மனிதன் பிற உயிரினங்களை ஆள்கின்றான்.

47. இந்த ஆளுகைத் திறன் மனிதனுக்கு எப்போது வந்தது?

ஆன்மாவையுடைய மனிதன் இப் பேரண்டத்தை (Universe) ஆளும் பேரான்மாவின் (Universal Soul) ஒரு பகுதியாக விளங்குவதால் ஆளுமைத் திறன் உள்ளது.

48. பேரான்மாவின் மறுபெயர் என்ன?

கடவுள்.

49. பேரான்மாவின் உடல் எது?
பேரண்டம். (Universe - body of Universal Soul)
50. பேரண்டத்தின் இயக்கத்திற்குக் காரணமாய் இருப்பது எது?
பேருயிர். (Universal Spirit)
51. பேரான்மாவின் ஒரு பகுதியான மனிதரின் ஆன்மாவை எப்படிக் குறிப்பிடலாம்?
சிற்றான்மா. (Individual Soul)
52. பேருயிரின் ஒரு பகுதியான மனிதரின் உயிரை எவ்வாறு குறிப்பிடலாம்?
சிற்றுயிர். (Individual Spirit)
53. பேருட—ன் ஒரு பகுதியான மனிதரின் உடலை எப்படிக் குறிப்பிடலாம்?
சிற்றுடல். (Individual body)
54. மனிதரின் சிற்றுட——ருந்து சிற்றுயிர் நீங்கியபின் சிற்றுடல் எங்கே செல்கிறது?
பேருடலை அடைகின்றது.
55. மனிதரின் சிற்றுட——ருந்து சிற்றுயிர் நீங்கியபின் சிற்றுயிர் எங்கே செல்கிறது?
பேருயிரை அடைகின்றது.
56. மனிதரின் சிற்றுட——ருந்து சிற்றுயிர் நீங்கியபின் சிற்றான்மா எங்கே செல்கிறது?
சிற்றான்மா ஆணவத்திற்கு இடமின்றி வாழ்ந்தால் பேரான்மாவை அடைகின்றது.
57. பேருடல், பேருயிர், பேரான்மாவின் பகுதியாகச் சிற்றுடல், சிற்றுயிர், சிற்றான்மா விளங்குவதால் மனிதரின் சிற்றான்மாவிற்கு என்றும் அழிவில்லை என்று கூறலாமா?
கூறலாம்.
58. சிற்றான்மாவாகிய மனிதர் பேரான்மாவாகிய கடவுளை அடையப் பெருந்தடையாயிருப்பது எது?
ஆணவம் (Egotism),
59, ஆணவத்தின் விளைவு என்ன?
பேரான்மாவின் விருப்பப்படி நடவாமை (பொது நல நோக்கோடு செயல்படாமல் முற்றிலும் சுய நல நோக்கோடு செயல்படுதல்).
60. ஆணவத்தின் வெளிப்பாடுகள் யாவை?
பேரான்மாவாகிய கடவுளை உணர முடியாமையால் ஏற்படும் இனப் பெருமை, சாதிப் பெருமை, நிறப் பெருமை, பணம், பதவி, அந்தஸ்து... இவற்றால் பெருமை.
61. பேரான்மாவின் ஒரு பகுதியான சிற்றான்மாவை உடைய மனிதருக்குள் ஏற்றத்தாழ்விற்கு இடமுண்டா?
எள்ளளவும் இடமில்லை. ஏனென்றால், சிற்றான்மாவையுடைய மனிதர் பேரான்மாவின் ஒரு பகுதியாக இருப்பதால் மனிதருக்குள் ஏற்றத்தாழ்விற்குச் சிறிதும் இடமில்லை.
62. அப்படியானால், மனிதரிடையே ஏற்றத்தாழ்வு கூறப்படுவதற்குக் காரணம் என்ன?
ஆன்மா, கடவுளைப் பற்றிய அறியாமை; இதற்குக் காரணமாய் இருப்பது ஆணவம்.
63. ஆணவத்தில் சிக்கிக் கொண்ட சிற்றான்மாவை விடுவிப்பதற்குப் பேரான்மா செயல்பட்ட முறை என்ன?
பேரான்மாவாகிய கடவுள் குருவாக வந்து. சிற்றான்மாக்கள் வினைப் பயனாகப் பெற வேண்டிய தண்டனையைத் தானே ஏற்று, மீட்பை ஈட்டியுள்ளது. ஆன்மவியல் பொதுவுடைமை வாழ்க்கையைக் காட்டியுள்ளது.
64. பேரான்மா ஈட்டியுள்ள மீட்பாகிய விடுதலையைச் சிற்றான்மா பெற என்ன செய்ய வேண்டும்?
சிற்றான்மா சுய நல நோக்கோடு செயல்படாமல் குருவாக வந்த பேரான்மா காட்டியுள்ள பொது நல நோக்குடன் செயல்பட வேண்டும்.
65. சிற்றான்மா நிலையான வாழ்வைப் (Eternal life) பெற என்ன செய்ய வேண்டும்?
பேரான்மா வகுத்துள்ள நியதி அல்லது முறைப்படி (Universal Constitution) வாழ வேண்டும்.

நான் யார்?
உடல்
உயிர்
ஆன்மா
கடவுள்
ஆணவம்

# புது யுகத்தின் தொடக்கம் தமிழர் ஆன்மவியல்

ஆன்மவியல் – என்பது ஆன்மாவைப் பற்றிய கல்வி என்பதைப் பார்த்தோம். ஆன்மா, மனிதனுக்கு மட்டுமே இருக்கின்ற காரணத்தால், ஆன்மவியல் மனிதனைப் பற்றி நன்கு அறிய உதவும் கல்வியாக விளங்குகிறது.

நாத்திக மதங்கள் உயிரைப் பற்றி ஆராய்கின்றன.

ஆத்திக மதங்கள் கடவுளைப் பற்றி ஆராய்கின்றன.

நாத்திக மதங்கள், ஆத்திக மதங்கள் ஆகிய இரண்டும் மனிதனைப் பற்றிய ஆய்வை மறந்து நிற்கின்றன.

> மதங்கள் ஆதிக்கவாதிகளின் கைகளிலுள்ள பகடைக் காய்களாக இருக்கின்ற காரணத்தால், மனித சமுதாயத்திற்கு எதிரான கருத்து களைப் பரப்பும் மதங்களை எதிர்க்கும் பொதுநலவாதிகள், கடவுளை எதிர்க்கும் நாத்திகர்கள் என முத்திரை குத்தப்பட்டு, இகழப்படுகின்றார்கள்.

இரண்டு வகை மதங்களும் கடவுள் இருக்கின்றாரா? இல்லையா? என்னும் ஆராய்ச்சியில் இறங்கி, திசை திரும்பி, ஆதிக்கவாதிகளின் கையில் அகப் பட்டுச் சிக்கித் தவிக்கின்றன. மதங்கள் மத வெறி ஊட்டப்பட்டு ஆதிக்க வாதிகளால் மனித சமுதாயத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு, மனித சமுதாயம் சீரழிக்கப்படுகிறது.

இதனால் மனித சமுதாயத்தின் மீது அக்கறை கொண்ட பெரியவர்கள் கடவுளின் பெயரால் நடைபெறும் கொடுமைகளைத் தாங்க இயலாமல்,

'கடவுளை மற,
மனிதனை நினை'

என்று கூற வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது.

மனித சமுதாயத்திற்காகக் குரல் கொடுத்த பெரியவர்கள் 'நாத்திகர்கள்' என்று முத்திரை குத்தப்பட்டு, 'இவர்கள் கடவுளுக்கு எதிரான வர்கள்' என்று காட்டப்படுகின்றனர். கடவுளுக்கு எதிரானவர்கள் எனக் காட்டப்படும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், சிந்தனைச் செம்மல் காரல் மார்க்ஸ் போன்ற பெரியவர்கள் உண்மையில் கடவுளுக்கு எதிரான வர்களே அல்லர். மதங்களுக்கு மட்டுமே எதிரானவர்கள்.

மதங்கள் வேறு; கடவுள் வேறு; கடவுள் எந்த மதத்தையும் சார்ந்தவர் அல்லர். ஆதிக்கவாதிகளின் கையி–ருக்கும் மதங்கள் காட்டும் போ– கடவுள் கொள்கைக்கு எதிரானவர்கள். இவர்கள் பொதுநலவாதிகள்; உண்மையான கடவுள் கொள்கையை நிறைவேற்றும் கடவுளின் பிள்ளைகள்.

மதங்கள் ஆதிக்கவாதிகளின் கைகளிலுள்ள பகடைக் காய்களாக இருக்கின்ற காரணத்தால், மனித சமுதாயத்திற்கு எதிரான கருத்து

> நாத்திக மதங்கள் உயிரைப் பற்றி ஆராய்கின்றன.
>
> ஆத்திக மதங்கள் கடவுளைப் பற்றி ஆராய்கின்றன.
>
> நாத்திக மதங்கள், ஆத்திக மதங்கள் ஆகிய இரண்டும் மனிதனைப் பற்றிய ஆய்வை மறந்து நிற்கின்றன.

களைப் பரப்பும் மதங்களை எதிர்க்கும் பொதுநலவாதிகள், கடவுளை எதிர்க்கும் நாத்திகர்கள் என முத்திரை குத்தப்பட்டு, இகழப்படுகின்றார்கள். பொதுநலவாதிகள் இவ்வாறு இகழப் படுவதற்குக் காரணம் ஆதிக்க வாதிகளின் சூழ்ச்சியேயாகும்.

ஆதிக்கவாதிகளின் சூழ்ச்சிகளை முறியடித்து, மனித சமுதாயத்தில் அன்பும் ஐக்கியமும் வளர்ந்து

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"

என உலக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து வாழ வழி வகுப்பதே தமிழர் ஆன்மவியல் ஆகும். தமிழர் ஆன்மவியல் உலகிற்கு வெளிப் பட்டிருக்கும் இந்தக் காலம், ஒரு புது யுகத்தின் தொடக்கம் ஆகும்.

-ஆசிரியர்

# "இந்து மதத்தில் தோமா வழிக் கிறிஸ்தவம்" பெங்களூரில் நடைபெற்ற 2 நாள் வகுப்புகள்

"இந்து மதத்தில் தோமா வழிக் கிறிஸ்தவம்" எனும் தலைப்பில் திரு. லூர்துநாதன் அவர்கள் பெங்களூரில் 18–11–11 மற்றும் 19–11–11 ஆகிய 2 நாட்கள் வகுப்புகள் ஒழுங்கு செய்தார்.

டாக்டர் மு. தெய்வநாயகம் மற்றும் டாக்டர் தெ. தேவகலா ஆகிய இருவரும் வகுப்புகள் எடுத்தனர்.

- இந்து மதம் வேறு; தோமா வழிக் கிறிஸ்தவம் வேறு அல்ல.
- கிறிஸ்தவர்கள் ஐரோப்பியர்களின் பிடியில் அகப்பட்டுள்ளனர்.
- இந்துக்கள் ஆரிய பிராமணர்களின் பிடியில் அகப்பட்டுள்ளனர்.
- ஒட்டு மொத்த தமிழ் இனமாகிய திராவிட இனம் இந்தியாவில் கிறிஸ்தவர் என்ற பெயரில் ஐரோப்பியருக்கும், இந்துக்கள் என்ற பெயரில் ஆரிய பிராமணர்களுக்கும் அடிமைப்பட்டு இருப்பதைச் சமய வரலாறு காட்டுகிறது.
- தமிழர் என்பதே திரிந்து திராவிடர் என்று குறிக்கப்படுகிறது.
- அனைவரையும் ஒன்றிணைப்பது ஆன்மவியல்.
- உடல், உயிர் இவற்றைத் தாண்டி ஆன்மா என்பது மனிதருக்கு மட்டுமே உள்ளது.
- ஆன்மாவைப் பற்றிய கல்வியே ஆன்மவியல்.
- அடிமைப்பட்ட தமிழினம் விடுதலை அடைய வழிவகுப்பது ஆன்மவியல்.
- சிற்றான்மாவாகிய மனிதன், பேரான்மாவாகிய இறைவனின் ஒரு பகுதியே.
- சிற்றான்மா, பேரான்மாவுடன் இணைந்து மகிழ முடியாதவாறு தடுப்பது ஆணவம்.
- இந்த ஆணவத்தி–ருந்து சிற்றான்மா விடுபடும்பொழுது பேரான்மாவை அடைந்து மகிழ்வடைகிறது.
- சிற்றான்மாவை ஆணவத்தி–ருந்து விடுவித்து நிலையான வாழ்வு அளிக்கவே பேரான்மா மனிதனாக வந்தார்.
- மனிதனாக வந்த பேரான்மா தன்னையே தியாகம் செய்து சிற்றான்மாக்கள் நிலையான வாழ்வை அடைய வழிவகுத்தது.
- எனவே, பேரான்மா ஈட்டிய மீட்பை – நிலை வாழ்வைப் பெறும் சிற்றான்மா மகிழ்வடைகிறது.
- கடவுள் வேறு; மதம் வேறு.
- கடவுள் இருக்கின்றார் என்பதை அறிவியல் வழியில் நிலைநாட்டுவது ஆன்மவியல்.
- சாதி, இன ஏற்றத்தாழ்விற்கு முற்றுப் புள்ளி வைப்பது ஆன்மவியல்.
- மத, இனக் கலவரங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பது ஆன்மவியல்.
- ஒன்றுபட்ட சமுதாயம் உருவாக வழிவகுப்பது ஆன்மவியல்.
- உலக சமுதாயம் அன்புடனும், ஐக்கியத்துடனும் வாழ வழிவகுப்பது ஆன்மவியல்.



திரு. லூர்துநாதன்

முத–ய கருத்துகள் விளக்கப்பட்டன.

இரண்டு நாட்கள் வகுப்புகளைச் சீரும், சிறப்புமாக திரு. லூர்துநாதன் அவர்களும், திருமதி. லூர்துநாதன் அவர்களும் நடத்தினர். இவர்களுக்கு மிகவும் உறுதுணையாக சகோதரி சிந்தியா ஸ்டீபன், மறைதிரு. மாசிலாமணி, மறைதிரு. மோகன்ராஜ் ஆகியோர் உதவி புரிந்தனர்.

வகுப்புகள் சிறப்பாக நடைபெறக் காரணமாயிருந்த இந்த இறையடியவர்களை மகிழ்வுடன் நினைக்கின்றோம்.

ஆன்மவிய–ன் சிறப்புகளை உணர்ந்து கொண்டவர்கள் ஆன்மவியலை உலகிற்கு உணர்த்த, தங்களை அர்ப்பணித்தமை இவ்வகுப்புகளின் தனிச் சிறப்பு ஆகும்.

– தெ. கலா

# கடவுள் ஏன்? மனிதனானார்

– அருட்சகோதரி எம். எழிலரசி

உலகெலாம் படைத்து, காத்து வரும் ஒப்பற்ற பரம்பொருளான கடவுள் மண்ணகம் வந்து மனிதனாகப் பிறந்தாரா?, கடவுள் தமக்குரிய மேன்மையான நிலையைத் துறந்து மனித உருவை ஏன் ஏற்க வேண்டும்? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை தருவது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம் என்பது தமிழகத்தில், தமிழ் மொழியில் தோன்றி வளர்ந்த ஒப்பற்ற சித்தாந்தம். ஆனால், சைவ சித்தாந்தம் என்றால் என்ன என்பது பற்றி இன்று எத்தனை தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பது கேள்விக் குறியே.

வேதங்களும், வேதங்களின் நிறைவாக வேதாந்தங்களும் தோன்றின. பலவகை சித்தாந்தங்களும் தோன்றி வளர்ச்சி பெற்ற நிலையில் அனைத்து சித்தாந்தங்களுக்கும் மணிமுடியாக, அனைத்திற்கும் முடிந்த முடிபாகத் தோன்றியதே சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தம் சாத்திர நூல்கள் பதினான்கு. இந்தப் பதினான்கு நூல்களுக்கும் மணிமுடியாகத் திகழ்வது மெய்கண்டார் இயற்றியுள்ள சிவஞானபோதம். 14 சாத்திரங்களில் 3 ஆவதான சிவஞானபோதத்தின் விளக்கமாகவும் மீதி 11 சாத்திரங்கள் இருப்பதால், **'மெய்கண்ட சாத்திரங்கள்'** என்ற பெயர் வழங்கப்பட்டு வருகின்றது. சைவ சித்தாந்தப் பொருளைப் பன்னிரண்டு நூற்பாக்களில் இரத்தினச் சுருக்கமாக மெய்கண்டார் தம் நூ–ல் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார். அவர் உலகப் படைப்பில் தொடங்கி, முதல் மனிதரால் விளைந்த முதல் குற்றத்தால், தூய நிலையில் படைக்கப்பட்ட உலகம் தூய்மையை இழந்து மலத்திற்குட்பட்ட நிலையையும், அதுவே சகச மலமாக மனித குலத்தைத் தொடர்ந்து பற்றி வரும் நிலையில், மனிதரை அதி–ருந்து மீட்டு, தூய நிலைக்கு மீண்டும் கொணர இறைவனே மனித உரு தாங்கி உலகிற்கு பிறந்து வந்தமையும், இறைவன் தாமே தவமியற்றி மனிதரை மீட்டுக் கொண்டமையும், ஆன்மா தன் நிலையை உணர்ந்து இறைவனையும் உணர்ந்து, தமக்காகத் தவம் புரிந்து இரத்தம் சிந்திய இறைவனின் செம்மலர் பாதத்தில் அவரது பேரன்பை உணர்ந்து தம் தவற்றிற்காகக் கண்ணீர் சிந்தி, அவர் பாதத்தில் தன்னையே முற்றிலும் சரணாக்குதல் வரையிலான மீட்பு வரலாற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

இறைவன் மனிதனாக உலகில் அவதரித்த வரலாற்றைச் சைவம், வைணவம், கிறித்துவம், இஸ்லாம் முதலான பல்வேறு சமயங்களும், வெவ்வேறு விதங்களில் தத்தம் சமய வேதங்களிலும், புராணங்களிலும் பறைசாற்றி நிற்கின்றன. இந்தியாவில் முத–ல் தோன்றிய சமயங்களான சமணமும், பௌத்தமும் கடவுள் நம்பிக்கையற்ற சமயங்கள்; எனினும், பிற்காலத்தில் உருவான மகாயான பௌத்தம் கடவுளின் மனிதவதாரத்தை ஏற்றுக் கொண்டமையை நாம் சமய வரலாற்றில் காண முடிகிறது. மெய்கண்டார் தம் சிவஞானபோத நூ–ல் கடவுள் மனித அவதாரம் எடுத்து வந்த நிகழ்வை அழகிய உவமை வழியாக எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார். இந்த உவமை எட்டாவது நூற்பாவில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**நூற்பா – 8**

**"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்**

**தம்முதல் குருவுமாய் தவத்தினில் உணர்த்த விட்டு**

**அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே".**

மன்னனின் குழந்தை எப்படியோ வழி தவறி காட்டிற்குள் வந்து, அங்குள்ள வேடர்களோடு வாழ்கிறது. அவ்வாறு வேடர்களோடு வாழும் குழந்தை தான் அரச குடும்பத்தைச் சார்ந்தவன் என்பதையும், தன் தந்தையே நாட்டை ஆளும் அரசர் என்பதையும் மறந்து, தன்னை வேடர் குடியில் தோன்றிய வேடனாகவே நினைத்து வாழ்கிறது. தன் பிள்ளையின் நிலையை அறிந்த அரசன் தானே நேரில் சென்று தம் பிள்ளையை மீட்டு, மீண்டும் அரச குடும்பத்தில் சேர்த்துக் கொள்ள விரும்புகிறார். தான் அரச கோலத்தில் சென்றால் தன்னைக் கண்டு அக்குழந்தை பயந்து ஓடி விடக் கூடும் என்பதால், தன் பிள்ளை வாழ்கின்ற நிலையில் உள்ள வேடரைப் போலவே தானும் உருவங் கொண்டு காட்டிற்குள் செல்கிறார். காட்டில் வேடர்களோடு ஒருவராகத் தானும் தங்கி, தம் பிள்ளையைச் சந்தித்துப் பழகி, படிப்படியாக அவன் யார் என்பதை அவனுக்கு உணர்த்துகிறார். மன்னர் அக் குழந்தையிடம், "நீ வேடர் குடியைச் சார்ந்தவன் அல்லன், நீ அரச குடும்பத்தைச் சார்ந்தவன். ஆகவே, இந்த வேடர் தொடர்பை விட்டு அரண்மனைக்குத் திரும்புவாயாக", என்று அறிவுறுத்துகின்றார். எனவே, வேடர் குடியில் தங்கி வாழ்ந்து வந்த மன்னரின் குழந்தை தன் உண்மை நிலையை உணர்ந்து, அரண்மனைக்குத் திரும்ப, தன் தந்தையைப் பின்பற்றுகிறது.

இறைவன் ஆன்மாவை மீட்டுக் கொண்ட தன்மையும் இவ்வாறே என்பதை மெய்கண்டார் இந்நூற்பாவில் வெளிப்படுத்தியுள்ளார். ஆன்மா இவ்வுலக வாழ்வில் ஐம்புலன்களாகிய வேடர்களுக்கு நடுவில் உலக வாழ்வே நிலையென எண்ணி மயங்கி வாழ்கிறது. ஆன்மாவிற்கு அதன் உண்மை இயல்பை உணர்த்த இறைவனே மனித உரு ஏற்று குருவாக வந்து, ஆன்மாவிற்கு அதன் உண்மை இயல்பை உணர்த்துகின்றார்.

உலகப் பொதுமறையான திருக்குறளில் முதல் அதிகாரமான கடவுள் வாழ்த்துப் பகுதியில்

**"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**

**நெறிநின்றார் நீடுவாழ் வார்"**

என்ற 6–ஆவது குறட்பாவின் பொருள், 'பொறிவாயிலாக ஐம்பொறிகளையும் ப–யாக்கிய கடவுளின் உண்மையான ஒழுக்க நெறியில் நிற்பவர் நிலைத்த வாழ்வைப் பெறுவர்' என்பதாகும்.

கடவுள் மனித அவதாரம் எடுத்த நிலையில் தான் அவர் ஐம்பொறிகளையும் ப–யாக்கியிருக்க முடியும். கடவுள் என்ற பரம்பொருள் நிலையி–ருந்து ப–யாக்கியிருக்க முடியாது. மேலும் **'அவி'** என்ற சொல் **'ப–'** என்ற பொருள் தருவதற்கு இலக்கியங்களி–ருந்து பல சான்றுகள் காட்டலாம். திருக்குறளிலேயே, **"அவிசொரிந்து ஆயிரம் வேட்ட–ன்...** எனத் தொடங்கும் குறட்பாவையும் சான்று காட்டலாம். மேலும், மூன்றாவது அதிகாரமாகிய 'நீத்தார் பெருமை' விண்ணக மகிமையை நீத்து, மண்ணகம் வந்த இறைவனின் பெருமையையே எடுத்துக் கூறுகிறது என்பதைக் குறட்பாவின் பொருளைச் சரியாக நோக்கினால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியும்.

கிறித்துவ மறைநூலான திருவிவி–யத்தின் **'புதிய ஏற்பாடு'** என்ற பகுதி முழுவதும் மனிதனாக அவதரித்த இறைமகனின் வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக இறைபணியாளரான தூய பவுல் அடிகளார், இறைமகன் மனிதனாக அவதரித்து, மனிதரைப் பாவத் தளையி–ருந்து மீட்ட நற்செய்தியை உலகின் பல நாடுகளுக்கும் சென்று பறைசாற்றியவர். அவர் பி–ப்பு நகர மக்களுக்கு எழுதிய திருமட–ல் பின்வரும் பகுதி வள்ளுவர் கூறும் நீத்தார் பெருமையைத் தெளிவாக எடுத்து விளக்கும் சான்றாதாரமாகத் திகழ்கிறது.

**"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வ–ந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்." (பி–: 2: 6–8)**

எனவே, சைவ சித்தாந்தமும், திருக்குறளும், திருவிவி–யமும் இறைவன் மனிதனாக அவதரித்த வரலாற்றைப் பறைசாற்றி நிற்பதன் காரணம் என்ன?. இறைவனின் அளவற்ற கருணை வெள்ளம் கரைபுரண்டு பொங்கிப் பாய்ந்து கொண்டேயிருக்கிறது. அக்கருணை நீரால் ஆன்மாக்கள் செழிப்படைய, மனித இதயங்கள் திறக்கப்பட வேண்டும். இறைமைந்தன் சிலுவைத் தவத்தால் சிந்திய செந்நீரில் நமது குற்றக் கறைகளைக் கழுவி நாம் தூய்மையடைய வேண்டும் என்பதையே அவை வ–யுறுத்தி நிற்கின்றன.

இறைவன் மனிதனாக அவதரித்த நாளைப் பல்வேறு சமயத்தவரும் வெவ்வேறு நாட்களில் நினைவுகூர்ந்து சிறப்பிக்கிறார்கள். கிறித்தவர்கள் டிசம்பர் மாதத்தில் நினைவுகூர்ந்து சிறப்பிக்கிறார்கள். எந்த நாளில் நாம் நினைத்துக் கொண்டாடினாலும் சரி, கடவுளின் மனித அவதாரத்தைப் புரிந்து கொள்வதன் வழியாகத்தான் நமது மனிதப் பிறப்பிற்கும், நமது இவ்வுலக வாழ்விற்கும் உரிய பொருளை நாம் கண்டு கொள்ள முடியும். அத்தகைய பொருளைக் காணும் தேட–ல் நாம் ஈடுபடுவோம். நிலைவாழ்வைக் கண்டடைவோம்.

இக்கருத்துகளை ஆய்வு அடிப்படையில் அறிந்து கொள்ள முனைவர் மு. தெய்வநாயகம் எழுதிய 'விவி–யம் திருக்குறள் சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு' நூலைப் படிக்கவும்.

---

# புத்தெழுச்சியை உண்டாக்குகிற ஆன்மவியல் கூட்டம்

**– அர்ச்சகர் சு. சீனிவாசன்**

மல்–கைப் பூவானது நறுமணத்தைக் கொடுக்க வல்லது, நறுமணத்தைக் கொடுப்பது மல்–கைப் பூவின் இயல்பு. அந்த மல்–கைப் பூக்களை பறித்து, சேற்றைவாரி பூசிக் கழிவு நீரையும் போட்டு நன்கு மெழுகிய பின்பு மல்–கைப் பூவின் அருகே சென்றால் நறுமணத்தைக் கொடுத்த மல்–கைப் பூ இப்பொழுது துர்நாற்றத்தை வீசும்!

துர்நாற்றத்தை வீசுவது மல்–கைப் பூவின் இயல்பு அல்ல; அது துர்நாற்றம் வீசாது; பின்பு ஏன் இப்பொழுது அந்த துர்நாற்றத்தைக் கொண்டுள்ளது. நறுமணம் கமழக் கூடியவற்றை அது சாராத காரணத்தால் நறுமணம் கமழக் கூடிய பூவும் நறுமணத்தை இழக்கின்றது. அதைப்போல மனிதர்களும் அன்பு என்னும் நறுமணத்தை மட்டுமே உணர்கின்றவர்களாகவும் வெளிபடுத்துப்பவர்களாகவுமே இருந்தார்கள். அவ்வாறே இறைவன் படைத்தார். பின்பு மனிதன் இறைவனிடம் கீழ்ப்படியாமையினால் ஆணவத்தின்பாற்பட்டு அன்பையிழந்து பாவத்தில் வீழ்ந்து, சாதி, மதம் என்னும் சேற்றையும் கழிவுநீரையும் மேலே பூசிக்கொண்டு அக்கிரமம் செய்கிறான். அப்படி அக்கிரமம் செய்கிறவர்களைத் தண்ணீரை ஊற்றித் தூய்மை செய்து அவர்களை மல்–கைப் பூக்களாக மாற்றுவதே ஆன்மவியல்.

**ஆன்மவியல் கூட்டம்**

ஊரெங்கும் திருவிழா என்பதைப் போல ஊரெங்கும் இனி ஆன்மவியல் கூட்டம் என்ற காலம் வரக்கூடும். மக்களிடத்திலே பிரிவினையை உண்டாக்கி ஒற்றுமையைக் குலைத்து தங்களின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்த முயல்கின்ற ஆரியர்களின் ஆணவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு ஆன்மவியல் கூட்டம் நடைபெறுவது காலத்தின் கட்டாயம் ஆகும்.

வரலாறு தெரியாமல் புராண நோக்கில் மட்டுமே இறை பிறப்பைக் குறித்து நிற்கும் இந்து மதத்தையும் புராண நோக்கு அற்ற கிறித்தவத்தையும் இணைக்கும் பொருட்டு அதனடிப்படையில் நடக்கும் இந்த ஆன்மவியல் கூட்டம் பங்கேற்பவர்களுக்குப் புத்தெழுச்சியைத் தருகின்றது. அறியாமையை நீக்குகின்றது; மதங்களின் பிடியி–ருந்து விடுதலை தருகின்றது. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன்" என்பதை உணர வைக்கிறது.

**புறப்படத் தயாராகும் புதிய படை**

ஆன்மவிய–ன் பெரும் சக்தி ஒரு மாபெரும் ஆன்மீக எழுச்சியை உண்டாக்குகின்றது. எட்டு திக்கும் சென்று உலக மக்களுக்கு ஆன்மாவை உணர வைத்து இறை பேரின்பத்தை அறியும்படியாகவும் இறை ஆட்சியை முழுமையாக நிலை நிறுத்தும் பொருட்டும் இப்பேரண்டத்தின் எதிர் வினை ஆற்றல்கள் எத்தனை துன்பம் கொடுப்பினும், மாய வலை விரிப்பினும், எதிலும் வீழாமல் அருள் சக்தியின் துணைகொண்டு ஒரு மிகப்பெரிய ஆன்மீகப் புரட்சி மூலம் இம்மண்ணில் இல்லாமை நீங்கவும், பகுத்துண்டு வாழவும், அன்பு தழைத்தோங்கவும், அறம் சிறந்தோங்கவும், நிலையான ஆன்மீகப் பொதுவுடைமை மலரவும், புறப்படத் தயாராகுகிறது ஆன்மவிய–ன் புதிய படை!!

**Postal Date : 1st and 2nd of every month Date of posting : 6th of December 2011**
Egmore RMS Patrika Channel, Regd.with Registrar, News Paper of India
Registration Number of the Newspaper TNTAM / 2009 / 30866 Postal Registered No. TN / CCN / 513 / 10 - 12
WPP licence No. TN/PMG (CCR)/WPP - 188/10-12.
T.C.No.T.N TAM 18701 THAMIZHAR SAMAYAM R.Dis No : 220 / 09

# நமது வெளியீடுகள்

| நூல்கள் | விலை |
|---|---|
| 1. உலக மொழிகளில் சிறந்தது தமிழ். எவ்வாறு? | – 5.00 |
| 2. தமிழர் சமயத்தை விடுவிக்கப் போவது யார்? | – 20.00 |
| 3. இந்துத்துவாவின் பிடியி–ருந்து இந்து மதத்தை விடுவிப்பது எவ்வாறு? | – 10.00 |
| 4. இந்தியா தோமா வழி திராவிடக் கிறிஸ்தவ நாடே... எவ்வாறு? | – 150.00 |
| 5. திருநீறா? சிலுவையா? | – 10.00 |
| 6. கடவுள் இருக்கின்றாரா? | – 15.00 |
| 7. திராவிடர் சிந்தனையில் பிள்ளையார் | – 10.00 |
| 8. கபாலீஸ்வரர் கோவில் கருவறையி–ருந்து பிராமணர்களே வெளியேறுங்கள் | – 20.00 |
| 9. அழிந்து கொண்டிருக்கும் தமிழ் இனத்தைப் பாதுகாப்பது எவ்வாறு? | – 20.00 |
| 10. சங்கரமடத்திற்கு ஒரு சவால் | – 15.00 |
| 11. சங்கரடத்திற்கு 108 கேள்விகள் | – 20.00 |
| 12. தன்மானமுள்ள இந்தியர்களாகிய நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன? | – 5.00 |
| 13. புனித தோமா விதைத்த விதை முளைக்கவில்லையா? | – 10.00 |
| 14. தமிழ்நாடு பிராமணர் அமைப்புகளுக்கு எச்சரிக்கை | – 50.00 |
| 15. உலக சமயங்களை ஒன்றிணைக்கும் தமிழர் சமயமும் தமிழர் ஆன்மவியலும் | – 50.00 |
| 16, Creeds and Doctrine of Trinity in St. Thomas Dravidian Christianity | - 50.00 |
| 17. Who Are the Indian Dalits? | - 10.00 |
| 18. Hindu Religion is the offshoot of St. Thomas Dravidian Christianity | – 25.00 |
| 19. புனித தோமாவழி தமிழ்க் கிறிஸ்தவத்தின் புனித நினைவிடங்கள் காப்பாற்றப்பட்ட வரலாறு | – 10.00 |
| 20. சிவஞானபோதம் | – 20.00 |
| 21. தமிழர் சமயம் மாத இதழின் ஆண்டுச் சந்தா | – 100.00 |

## பாராட்டுகள்

கடந்த தமிழர் சமய மாத இதழில் கொடுக்கப்பட்ட ‘புதிர் போட்டி’யில்

**அர்ச்சகர் சிவசங்கர்**

என்னும் **திருவேங்கட இராமானுஜதாசன்,**

திருச்சி, அவர்களும்

**திரு. அன்டோனி வசந்த்,**

கோவை, அவர்களும்

**பரிசு பெறுகின்றார்கள்.**

அவர்கள் இருவக்கும் **எங்கள் பாராட்டுகளை** அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## DVDs

| | |
|---|---|
| 1, தருமை ஆதீன விவாதமும் நமது வெற்றியும் – 1 DVD | – 100/– |
| 2. தமிழர் சமய உலக முதல் மாநாடு – 3 DVDs | – 300/– |

**உலகத் தமிழர் ஆன்மவியல் இயக்கம்**
278, கொன்னூர் நெடுஞ்சாலை, அயன்புரம், சென்னை – 600 023.
☎+9144-26743842; 9840003842 Email: tamilarsamayam2010@gmail.com

**தமிழர் சமயம் இதழுக்கான சந்தா செலுத்தாதவர்கள் ஆண்டுச் சந்தா ரூ.100/- செலுத்தி இதழைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

| | | |
|---|---|---|
| **Editor, Publisher, Printer** | : | Dr.M.Deivanayagam Ph.D. |
| **Sub Editors** | : | Dr. D. Devakala, Ph.D.<br>Mr. Seerkazhi Siva. Chandrasekaran |
| **Printer** | : | D. Devavaram, Meipporul Printers,<br>278, Konnur High Road,<br>Ayanpuram, Chennai - 600 023. |
| **Phone** | : | 26741526 |
| **Email** | : | **tamilarsamayam2010@gmail.com**<br>**26743842; 9840003842** |

பெறுநர்

Owned and published by Dr. M.Deivanayagam, No.278, Konnur High Road, Ayanpuram, Chennai-600 023 and printed by D.Devavaram at Meipporul Achakam, No. 278, Konnur High Road.Ayanpuram, Chennai-600 023. **Editor**: Dr. M. Deivanayagam